செ. கு. எண்:014 நாள் :20.03.2015

**மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் நத்தம் இரா.விசுவநாதன் அவர்களின் அறிக்கை – 20.3.2015**

"உடன்குடி மின் திட்டத்தை தாமதித்ததற்கும் – ரத்து செய்ததற்கும்; விசாரணைக் கமிஷன் அமைக்கத் தயாரா?" என தலைப்பிட்டு திமுக தலைவர் கருணாநிதி அறிக்கை ஒன்றை 18.3.2015 அன்று வெளியிட்டுள்ளார். முன்னுக்கு பின் முரணாகவும், பொய்யான தகவல்களைக் கொண்டதாகவும், ஒரு நாளிதழில் கற்பனையாக வெளியிடப்பட்ட செய்தியின் அடிப்படையிலும், அந்த அறிக்கையை திரு.கருணாநிதி வெளியிட்டுள்ளார். 2006 முதல் 2011 வரையிலான முந்தைய மைனாரிட்டி திமுக ஆட்சியில் வெறும் 206 மெகாவாட் மின் நிறுவு திறன் மட்டுமே கூடுதலாக சேர்க்கப்பட்டு, இருள் சூழ்ந்த தமிழகமாக தமிழகத்தை இருண்ட காலத்திற்கு கொண்டு சென்ற திரு.கருணாநிதிக்கு மின்சாரம் பற்றி எதையும் பேசுவதற்கு எந்தவித அருகதையும் இல்லை. தமிழகத்தின் மின் நிலைமையை சீரழித்த திரு.கருணாநிதி உடன்குடி மின்திட்டம் நிறைவேற்றப்படுவதில் ஏற்படும் காலதாமதம் தமிழகத்தில் மின் பற்றாக்குறைக்கு வழி வகுக்கிறது என்று அங்காலய்த்திருப்பது 'ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுததாம்' என்ற பழமொழியைத் தான் நினைவுபடுத்துகிறது. தமிழகத்தில் மின் வெட்டே இல்லை என்ற நிலையை ஏற்படுத்தும் வகையில் 4,640 மெகாவாட் அளவுக்கு கூடுதல் மின்சாரம் கிடைப்பதற்கு வழிவகை செய்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தான்.

தமிழ்நாட்டில் வீட்டு உபயோகத்திற்கு எவ்வித தங்கு தடையுமின்றி மாண்புமிகு அம்மாவின் அரசால் மின் விநியோகம் செய்யப்படுவதை பொறுத்துக்கொள்ள முடியாத திரு. கருணாநிதி, இந்த அரசின் மீது அபாண்டமாக பழி சுமத்துவதற்காகவே இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

தனது அறிக்கையின் முதல் பத்தியில் திரு.கருணாநிதி, உடன்குடி மின்திட்டத்திற்கு மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்திடம் அனுமதி பெற்று நிலம் கையகப்படுத்தும் பணிகள் முடிவடைந்து, 22.2.2009 அன்று 'உடன்குடி பவர் கார்ப்பரேஷன் லிமிடெ' நிறுவனத்திற்கு அடிக்கல் நாட்டு விழாவும் நடைபெற்றது என்று கூறியுள்ளார். திரு.கருணாநிதி கூறியுள்ள தகவல்களில் அடிக்கல் நாட்டு விழா பற்றிய தகவல் மட்டுமே உண்மை. நிலம் கையகப்படுத்தப்பட்டது என்பதும், மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்திடம் அனுமதி பெறப்பட்டது என்பதும் வடிகட்டிய பொய். அதனால் தான், தனது அறிக்கையின் மூன்றாவது பத்தியில் திரு.கருணாநிதி உடன்குடி மின் திட்டத்திற்கான டெண்டர் விடும் பணிகள் 2013 ஆம் ஆண்டு ஏப்ரலில் தொடங்கப்பட்டன என்றும் இந்த மின் நிலையத்திற்காக திருச்செந்தூர் தாலுகாவில் உள்ள 700 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலம் மின் வாரியத்திற்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டது என்றும், தனியாருக்குச் சொந்தமான 250 ஏக்கர் நிலத்தை கையப்படுத்தும் பணியில் வருவாய் துறை அதிகாரிகள் ஈடுபட்டார்கள் என்றும் தெரிவித்துள்ளார். திரு.கருணாநிதி முதல் பத்தியில் கூறியுள்ளது போல் நிலம் கையகப்படுத்தும் பணிகள் முடிவடைந்துவிட்டன என்றால், 2013ஆம் ஆண்டுக்குப் பின்னர் எதற்காக நிலம் கையகப்படுத்தும் பணியில் வருவாய் துறை அதிகாரிகள் ஈடுபட வேண்டும்?

உடன்குடி அனல்மின் திட்டம் அமைப்பதற்காக பாரத மிகுமின் நிறுவனமும், தமிழ்நாடு மின் வாரியமும், 2007 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முந்தைய மைனாரிட்டி திமுக ஆட்சியில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டு உடன்குடி மின் கழகம் என்னும் நிறுவனம் 26.12.2008 அன்று ஏற்படுத்தப்பட்டது. ஆனால் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின் இறுதி வரை, அதாவது, 2011 ஆம் ஆண்டு மே மாதம் வரை, ஏறத்தாழ நான்கு ஆண்டுகள் உடன்குடி திட்டம் தொடர்பாக எந்த வித பணிகளும் நடைபெறவில்லை. முந்தைய மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசில் அங்கம் வகித்த திமுக தனது சொந்த நலன்களுக்காக பாடுபட்டதே தவிர, தமிழக மக்களின் நலன்களுக்காக எதுவுமே செய்யவில்லை. அதனால் தான், இத்திட்டத்திற்கான நீண்ட கால நிலக்கரி ஒதுக்கீடு (Long-Term Coal Linkage) முந்தைய மைனாரிட்டி திமுக அரசால் பெறப்படவில்லை; இத்திட்டத்திற்கான மைய அரசின் சுற்றுசூழல் அனுமதியும் பெறப்படவில்லை. உடன்குடி மின் கழக நிறுவனத்திற்குரிய 48 விழுக்காடு பங்குத்தொகை அளிக்கக்கூடிய நிதி நிறுவனமும் அறியப்படவில்லை. இவ்வாறு, உடன் குடி மின் திட்டம் துவங்கப்படுவதற்கான எந்தவித பணிகளையும் செய்யாமல், அடிக்கல்லை மட்டும் நாட்டிவிட்டு இந்த மின் உற்பத்தி திட்டம் தொடங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக திரு.கருணாநிதி சொல்லுவது எத்தகைய பித்தலாட்டம்? நான்கு ஆண்டுகள் இந்த திட்டத்திற்கு எந்தப் பணியையும் செய்யாமல், திரு.கருணாநிதி ஏன் காலதாமதம் செய்தார் என்று இப்போது தான் அவரது அறிக்கையின் மூலம் விளங்குகிறது. தனியாரிடமிருந்து மின்சாரம் பெறுவதற்காகவே, அவ்வாறு எந்தப் பணியையும் திரு.கருணாநிதியின் முந்தையை மைனாரிட்டி திமுக அரசு செய்யவில்லை போலும்! ‘தான் திருடி, பிறரை நம்பாள்’ என்பதைப் போல திரு.கருணாநிதி தற்போது இந்த திட்டத்தின் காலதாமதம் தனியாரிடமிருந்து மின்சாரம் வாங்குவதற்காகவே என தன்னைப் போலவே பிறரையும் நினைத்துக் கூறியுள்ளார்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நடவடிக்கைகளின் பயனாக, மின் வெட்டே இல்லாத நிலையை எய்தி மின் மிகை மாநிலம் என்ற பெருமையை தமிழகம் அடையும் நிலையை எட்டிக் கொண்டிருக்கும் வேளையில், உடன் குடி மின் திட்டம் முடங்கிட வேண்டும் என்பது தான் திரு.கருணாநிதியின் விருப்பம் போலும்! எனவே தான் குறைகள் உள்ள ஒப்பந்தப் புள்ளிகளை மின் வாரியம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கிறார். அவ்வாறு செய்தால் டெண்டரில் வெற்றிப் பெறாதவர் நீதிமன்றம் செய்து தடையாணைப் பெற்று இந்த திட்டமே முடங்கி விடாதா? என திரு.கருணாநிதி பகல் கனவு கண்டு அதன் காரணமாக, இந்த அரசின் மீது அவதூறு சொல்லியுள்ளார்.

எந்தப் பணியையும் செய்யாமல், அடிக்கல் நாட்டிவிட்டாலே, திட்டம் துவங்கப்பட்டதாக திரு.கருணாநிதி தனது ஆட்சி காலத்தில், தன்னையும் ஏமாற்றிக் கொண்டு. தமிழக மக்களையும் ஏமாற்றியுள்ளார். உடன்குடி அனல் மின் நிலையம் போன்றே, தூத்துக்குடி நான்காம் நிலை 2 x 500 மெகாவாட் மின் நிலையம் அமைக்கப்படுவதாக 2007–ம் ஆண்டு அறிவித்து மின்சார வாரிய பொன்விழா மேடையில் அடிக்கல்லையும் திரு.கருணாநிதி நாட்டினார். அதன் பின்னர், அந்தத் திட்டத்திற்கு தெரிவு செய்த நிலத்தை மின்வாரியம் ஏன் பயன்படுத்தவில்லை? மின்வாரியத்திற்கு ஒதுக்கப்பட்ட நிலத்தை தனியாருக்கு தாரை வார்க்க வழிவகை செய்தது ஏன்? என்பதை திரு.கருணாநிதி விளக்கத் தயாரா? 1,000 மெகாவாட் மின் வாரிய திட்டத்தை தனியாருக்கு தாரை வார்த்ததால் 525 மெகாவாட்டாக அது குறைந்தது பற்றி திரு.கருணாநிதி விளக்குவாரா? திரு.கருணாநிதியால் தேர்வு செய்யப்பட்ட அந்த தனியார், மின் திட்டத்தை துவக்கவில்லையே? தனியாரிடமிருந்து மின்சாரம் வாங்குவதற்காகத் தான் திரு.கருணாநிதி இது போன்ற நடவடிக்கையை எடுத்தாரா? மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின்

அரசு எந்த ஒரு அரசு திட்டத்தையும் தனியாருக்கு தாரை வார்த்து கொடுக்கவில்லை என்பதையும் திரு.கருணாநிதிக்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதே போன்று, குந்தா நீரேற்று நிலைய மின் திட்டத்திற்கு 2007–ல் திரு.கருணாநிதி அடிக்கல் நாட்டினார். அதன் பின்னர் முந்தைய மைனாரிட்டி திமுக ஆட்சி முடியும் வரை அந்தத் திட்டத்தை நிறைவேற்ற என்ன நடவடிக்கையை திரு.கருணாநிதி எடுத்தார் என்பதை மக்களுக்கு விளக்குவாரா? அதே பொன்விழா மேடையில் மேட்டூர் மின் திட்டத்திற்கும் திரு.கருணாநிதி அடிக்கல் நாட்டினார். ஆனால், அந்த மேட்டூர் மின் திட்டப் பணிகள் முடங்கிக் கிடந்த நிலையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு 2011 ஆம் ஆண்டு பதவி ஏற்ற பின், திட்டப் பணிகளை துரிதப்படுத்தியதால் தான், இன்றைக்கு அந்தத் திட்டம் பயன்பாட்டிற்கு வந்துள்ளது என்பது திரு.கருணாநிதிக்கு தெரியுமா? தெரியாதா **?**

உடன்குடி மின் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு எந்த வித வேலையையும் 5 ஆண்டு காலமாக பாரத மின் மிகு நிலையம் மேற்கொள்ளாத நிலையில் 24.2.2012 அன்று மாண்புமிகு புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழ்நாடு மின்சார வாரியமே மாநில அரசின் திட்டமாக இதனைச் செயல்படுத்தும் என அறிவித்தார். இத்திட்டத்திற்குத் தேவையான வெளிநாட்டு நிலக்கரி பெறுவதற்கு மத்திய அரசின் MMTC நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. மத்திய அரசின் சுற்றுசூழல் அமைச்சகத்தின் தடையில்லா சான்றிதழ் 14.10.2013 அன்று பெறப்பட்டது.

மைய அரசின் சுற்றுசூழல் அனுமதி பெற்ற பிறகு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்படுவது வழக்கம் என்றாலும், மைய அரசின் சுற்றுசூழல் அனுமதியை எதிர்பார்த்து முன்கூட்டியே இத்திட்டத்திற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, அதில் பங்கேற்ற நான்கு நிறுவனங்களில் இரண்டு நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டு விலைப் புள்ளிகள் 18.10.2014 அன்று திறக்கப்பட்டன. இத்திட்டத்திற்கான கலந்தாலோசகர் (Consultant) மேற்கண்ட விலைப்புள்ளிகளை ஆய்வு செய்து 31.12.2014 அன்று அறிக்கை ஒன்றை தாக்கல் செய்தார்.

மேற்கண்ட கலந்தாலோசகர் (Consultant) அறிக்கையில் தெரிவு செய்யப்பட்ட இரண்டு நிறுவனங்கள் அளித்த விலைப்புள்ளிகளில் குறைகள் உள்ளன. எனவே, குறைகள் உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக் கொள்ளவதா? வேண்டாமா? என்கின்ற முடிவை மின் உற்பத்தி கழகம் முடிவு செய்ய வேண்டும் என அறிவுறுத்தினார். மேற்கண்ட கலந்தாலோசகரது பரிந்துரை மின் வாரிய இயக்குனர்கள் கூட்டத்தில் நன்கு பரிசீலிக்கப்பட்டு குறைகள் உள்ள விலைப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல எனவும், எனவே, ஒப்பந்தப்புள்ளிகளை ரத்து செய்வது எனவும், புதிதாக ஒப்பந்தப்புள்ளிகள் கோருவது எனவும் முடிவு செய்யப்பட்டது. குறையுள்ள ஒப்பந்தப் புள்ளிகளை ஏற்றுக் கொள்வதற்கு சட்டத்தில் வழியில்லை. மேலும், குறையுள்ள ஒப்பந்தப் புள்ளிகளை ஏற்றுக் கொண்டால், பணி கிடைக்காதவர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து, தடையாணைப் பெற்று, இந்த திட்டமே முடங்கிவிட ஏதுவாகும்.

நிதிநிலை அறிக்கை தயாரிக்கும் பணியிலும் மற்றும் அவசரப் பணியிலும் துறை செயலாளர்கள் ஈடுபடும் பொழுது மின்சார வாரிய இயக்குநர்கள் கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெறுவது வழக்கமான ஒன்று தான். இது ஒன்றும் புதிதல்ல. ஏற்கனவே, பல நேரங்களில் மின் வாரிய இயக்குநர்கள் கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடந்துள்ளது. முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 14.6.2008, 15.7.2010,

28.2.2011 ஆகிய தேதிகளில், வாரியக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடந்ததுள்ளதே! இதற்கு என்ன தனிப்பட்ட காரணம் என்பதை திரு.கருணாநிதி விளக்க வேண்டும். மேலும், வாரியக் கூட்டத்திலிருந்து இயக்குநர்கள் எவரும் வெளியே செல்லாத நிலையில் ஒரு நாளிதழில் வெளியிடப்பட்ட பொய்யான செய்தியை சுட்டிக் காட்டிவது, இந்த அரசின் மீது உள்ள காழ்ப்புணர்ச்சியின் காரணமாகத் தான். இயக்குநர்கள் சிலர் வாரியக் கூட்டத்தின் உறுப்பினர்களாக உள்ள நிலையில் அவர்கள் எவ்வாறு வெளியே செல்வார்கள்? வாரியக் கூட்ட நடவடிக்கைக் குறிப்பை எவ்வாறு ஏற்றுக் கொள்வார்கள்? எனவே, 'பொய்யைச் சொன்னாலும் பொருத்தமா சொல்லுங்கடா; போக்கத்த பசங்களா' என்ற உடுமலைக் கவிராயர் சொன்னதை நினைவில் கொள்க என திரு.கருணாநிதியை கேட்டுக் கொள்கிறேன்.

அதிக விலைக்கு மின்சாரம் வாங்குவதற்காகத் தான் உடன்குடி திட்டத்தில் தாமதம் ஏற்படுவதாக கற்பனையான குற்றச்சாட்டை திரு.கருணாநிதி கூறியுள்ளார். அதிக விலைக்கு மின்சாரம் கொள்முதல் செய்வதற்கு ஒப்பந்தம் போட்டவரே திரு.கருணாநிதி தான். அதாவது, GMR நிறுவனத்துடன் 12.9.1996 அன்றும், PPN நிறுவனத்துடன் 3.1.1997 அன்றும், மதுரை பவர் நிறுவனத்துடன் 21.5.1998 அன்றும், சாமல்பட்டி நிறுவனத்துடன் 22.5.1998 அன்றும் தி.மு.க. ஆட்சியில் ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. இவை தான், தனியார் உற்பத்தி செய்யும் அதிக விலை மின்சார நிறுவனங்கள் ஆகும்.

தி.மு.க. ஆட்சிக் காலமான 2006-2007 முதல் 2010-2011 வரை ஐந்தாண்டு காலத்தில் மேற்கண்ட தனியார் மின் நிறுவனங்களிடமிருந்து 20,308 மில்லியன் யூனிட் மின்சாரம் வாங்கப்பட்டுள்ளது. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக்காலத்தில் 2011-12 முதல் 2014-15 (டிசம்பர்) வரை மூன்றேமுக்கால் வருட காலத்தில் 11,065 மில்லியன் யூனிட் மட்டுமே வாங்கப்பட்டுள்ளது. அதாவது திமுக ஆட்சிக்காலத்தில் வாங்கியதில் சுமார் பாதி அளவே அதுவும் அவசரத் தேவையை முன்னிட்டு வாங்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது, குறுகிய கால அடிப்படையில் வாங்கப்படும் மின்சாரத்தைப் பொறுத்த வரையில், திமுக ஆட்சிக் காலமான பிப்ரவரி 2008-லிருந்து மின்சாரம் வெளி மாநிலங்களிலிருந்தும், மார்ச் 2009–லிருந்து தமிழகத்தில் உள்ள தனியார் மின் உற்பத்தி நிறுவனங்களிடமிருந்தும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. தற்சமயம் வெளி மாநிலங்களிலிருந்து ரூ.4.93 என்ற குறைந்த விலையிலேயே ஒப்பந்தம் செய்யப்பட்டு மின்சாரம் பெறப்பட்டு வருகிறது. அதேபோல், தமிழகத்தில் உள்ள தனியார் மின் உற்பத்தி நிலையங்களிடமிருந்து (CPP) தற்போது யூனிட் ஒன்றுக்கு ரூ.5.50 என்று கொள்முதல் செய்யப்படுகிறது. யூனிட் ஒன்றுக்கு ரூ.5.50 என்ற வீதத்தில் மூன்று ஆண்டுகளாக அதே விலையில் தான் தற்போதும் கொள்முதல் செய்யப்படுகின்றது. ஆனால், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் தனியாரிடமிருந்து (CPP) கொள்முதல் செய்யப்பட்ட மின்சாரத்தின் சராசரி விலை 6.70 ரூபாய் ஆகும். வெளி மாநிலங்களிடமிருந்து யூனிட் ஒன்றுக்கு ரூபாய் 9.05 வீதம் அதிக விலை கொடுத்து மின்சாரம் திமுக அரசால் வாங்கப்பட்டுள்ளது. மேலும், மின் பரிமாற்ற வர்த்தக நிறுவனம் மூலம் 5,261 மில்லியன் யூனிட் வாங்கப்பட்டது. அதிகபட்சமாக யூனிட் ஒன்றுக்கு 15.22 ரூபாய் என்ற அளவில் கூட முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் மின் பரிமாற்ற வர்த்தக நிறுவனம் மூலம் கொள்முதல் செய்யப்பட்டது. இப்படி, மிக அதிக விலைக் கொடுத்து தனியாரிடமிருந்து மின்சாரம் வாங்கியது திமுக ஆட்சியில் தான். தற்போது அவ்வாறு வாங்கப்படுவதாக

கூறப்படும் பொய்கள் மூலம் இதனை மக்கள் மறந்து விடுவார்கள் என்று திரு.கருணாநிதி நினைத்தால் ஏமாந்து தான் போவார்!

உடன்குடி திட்டத்திற்கு நிலக்கரி கையாளும் சுய சார்பு துறைமுகம் அமைப்பதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் 19.3.2015 அன்று திறக்கப்பட்டுள்ளன. இதற்கான பணிகள் விரைவில் துவங்கும். உடன்குடி நிலை-I (2 x 660 MW) திட்டத்திற்கான புதிய ஒப்பந்தப்புள்ளிகள் விரைவில் கோரப்பட்டு இறுதி செய்யப்பட்டு பணிகள் தொடங்கப்படும்.

திமுக ஆட்சி காலத்தில் தமிழக மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை மறைத்து, அதைப் பற்றி மக்கள் மறந்து விடமாட்டார்களா? என்ற வகையில் பேசுவதும், அறிக்கைகள் வெளியிடுவதும், திரு.கருணாநிதிக்கும், அவரது வாரிசுகளுக்கும் கை வந்த கலை தான். அந்த அடிப்படையிலேயே, நாடாளுமன்ற மாநிலங்களவையில் திமுகவைச் சார்ந்த திருமதி. கனிமொழி மீத்தேன் எரிவாயுத் திட்டத்தை மத்திய அரசு ரத்து செய்ய வேண்டுமென சமீபத்தில் பேசியுள்ளார். மீத்தேன் எரிவாயுத் திட்டத்திற்கு அனுமதி அளித்ததே திமுக தலைவர் கருணாநிதியும், அவரது தனயன் திரு.மு.க.ஸ்டாலினும் தான். இந்தத் திட்டத்திற்கு தடை விதித்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தான். தற்போது இத்திட்டத்தை ரத்து செய்யும் படி மாநிலங்களவையில் பேசுவதன் மூலம் திமுக இழைத்த துரோகத்தை காவேரி டெல்டா விவசாயிகள் மறந்து விடுவார்கள் என திமுக கனவு காண்கிறது. அது போலவே அஇஅதிமுக அரசின் மீது வீண் பழி சுமத்தி அறிக்கை வெளியிடுவதன் மூலம் மின்சாரம் தொடர்பாக தமிழக மக்களுக்கு திமுக இழைத்த வஞ்சனையை தமிழக மக்கள் மறந்து விடுவார்கள் என்று திரு.கருணாநிதி நினைக்கிறார். இந்த ஏமாற்று பேச்சுகள் மூலமும், அறிக்கைகள் மூலமும், திமுகவின் துரோகத்தை மறந்து விடவோ, மன்னித்து விடவோ தமிழக மக்கள் ஒன்றும் ஏமாளிகள் அல்ல!

நத்தம் இரா.விசுவநாதன்
மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**